IJCRT.ORG ISSN : 2320-2882
INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS (IJCRT)
An International Open Access, Peer-reviewed, Refereed Journal

# தமிழ் இலக்கியங்களில் மருத்துவக்கலை

முனைவர் ப. பிரியா
உதவிப்பேராசிரியை
தமிழ்த்துறை
கம்பன் மகளிர் கலைமற்றும் அறிவியல் கல்லூரி
திருவண்ணாமலை– 606603

**முன்னுரை :**

மனிதனின் உள்ளத்தை தன் வயமாக்கி, அவ்வளவோடு நில்லாமல் வெளிப்படும் ஆற்றலே கலை என்பதாகும். அதைப்போன்று தமிழ் இலக்கியங்களில் பல்வேறுபட்ட கலைகள் இடம் பெறுகின்றன. கலைகளின் பெருமையை தமிழ் இலக்கியங்கள் பறைசாற்றுகின்றன. அதில் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு கலையான மருத்துவக் கலையை குறித்து ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**பண்பாடும் மருத்துவமும் :**

தமிழ் இலக்கியங்கள் மருத்துவ முறைகளை மட்டும் கூறவில்லை. மாறாக அன்றைய மக்களின் நம்பிக்கைகள் கலாச்சாரம் மற்றும் அன்றாட வாழ்வின் ஒரு பகுதியாக இருந்த மருத்துவச் செயல்பாடுகளையும் உள்ளடக்கியுள்ளன.

**மருத்துவ விழிப்புணர்வு :**

தமிழ் இலக்கியங்கள் மூலம் மக்களின் நோய்த் தடுப்பு சிகிச்சை மற்றும் ஆயுளை நீட்டிக்கும் முறைகளைப் பற்றி அறிந்து கொள்ளலாம். இதனை நவீன மருத்துவமுறைகளுடன் ஒப்பிடும் போது தமிழர்களின் தனித்துவமான அறிவியல் அறிவை வெளிப்படுத்துகிறது.

ஒருவர் உடலுக்கு ஏற்றபடி உணவும் செயலும் இருத்தல் வேண்டும். உணவு மிகுதிப்படினும் அல்லது குறையினும் வாதம், பித்தம், கபம் என்னும் மூன்று நோயும் அவனுக்கு துன்பம் செய்யும் என திருவள்ளுவர் கூறுகிறார்.

**சித்த மருத்துவம் :**

இது தமிழர்களுக்கான தனித்துவமான மருத்துவ முறையாகும். பண்டைக்காலச் சித்தர்கள் தங்கள் அனுபவ அறிவின் மூலம் இதை வளர்த்தெடுத்துள்ளனர். சித்தர்கள் பல நூல்களை இயற்றியதோடு மூலிகைளின் பயன்பாடு சூரணம், லேகியம், செந்தூரம் போன்ற பல்வேறு மருத்துவ வடிவங்களை கண்டறிந்துள்ளனர்.

**வர்மக்கலை :**

உடலில் உள்ள குறிப்பிட்ட உயிர்சக்தி மையங்கள் அல்லது புள்ளிகளை அடிப்படையாகக் கொண்ட ஒரு கலை வர்மக்கலையாகும்.

**“உற்றான் அளவும் பிணிஅளவும் காலமும்**

**கற்றான் கருதிச் செயல்” (குறள் - 949)**

நோயுற்றவரின் வயது, நோய் பாதிப்பின் அளவு, காலம் ஆகிய மூன்றினையும் ஆராய்ந்து தான் செயல்பட வேண்டும் என்று திருக்குறள் கூறுகிறது.

**மருத்துவத்திற்கான இலக்கணம் :**

**“நோய்நாடி நோய் முதல்நாடி அதுதணிக்கும்**

**வாய்நாடி வாய்ப்பச் செயல்” (குறள் - 948)**

ஒருவரின் உடலில் ஏற்பட்டுள்ள நோய் என்னவென்பதை நன்கு ஆராய்ந்து நோய் எதனால் ஏற்பட்டது என்ற காரணத்தை அறிந்து அந்நோயைப் போக்குவதற்குரிய வழிகளை கண்டறிந்த பிறகு அவ்வழி நோயாளியின் உடல்நிலைக்கு ஒத்துழைக்குமா என ஆராய்ந்து மருத்துவம் பார்க்கவேண்டும் என்று திருக்குறள் எடுத்துரைக்கின்றது.

**நற்றிணையில் மருத்துவக் கலை :**

மருத்துவர்கள் எங்ஙனம் செயல்பட வேண்டும் என்பதை தமிழ் இலக்கியங்கள் எடுத்துக் கூறுகின்றன. மருத்துவர் நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அனைத்தையும் வழங்காமல் நோயின் தன்மையை நன்கு ஆராய்ந்து அதனை முழுமையாகக் குணப்படுத்தும் தன்மையுடையவராக இருக்க வேண்டும் என்பதை,

**“அரும்பிணி உறுநர்க்கு வேட்டது கொடாஅது**
**மருந்து ஆய்ந்து கொடுத்த அறவோன் போல” (நற் பாடல் - 136)**

என்ற நற்றிணை பாடல் வரிகள் மருத்துவம் பற்றி எடுத்துக் கூறுகின்றது.

**ஆசாரக்கோவையில் மருத்துவம் :**

**“கிடந்துண்ணார் நின்றுண்ணார்**
**வெள்ளிடையும் உண்ணார்**
**சிறந்து மிகவுண்ணார் கட்டில்மேல் உண்ணார்**
**இறந்தொன்றும் தின்னற்க நின்று” (ஆசாரக்கோவைபாடல் - 23)**

உணவுப்பொருட்களைப் படுத்துக் கொண்டும், நின்று கொண்டும், திறந்த வெளிகளிலும் உண்ணுதல் கூடாது. உணவுப்பொருளை அதிகம் விரும்பியும் உண்ணுதல் கூடாது. கட்டிலில் அமர்ந்த படியும் உண்ணுதல் கூடாது என்கிறது ஆசாரக்கோவை மேலும்.

**“அந்திப் பொழுது கிடவார் நடவாரே**
**உண்ணார் வெகுளார் விளக்கிகழார் முன்னந்தி**
**அல்குண்டு அடங்கல் வழி” (ஆசாரக்கோவை பாடல் - 29)**

பகல் பொழுதில் கண்ணுறங்குபவர்கள் நோயினை விரும்பி ஏற்றுக் கொள்ளுவர் என்கிறது.

**ஆசாரக்கோவை :**

**“பாழ்மனையும், தேவ குலனும், சுடுகாடும்,**
**ஊரில் வழிடியழுந்த ஒற்றை முதுமரனும்,**
**தாமே தமியர் புகாஅர்; பகல் வளரார்**
**நோயின்மை வேண்டுபவர்” (ஆசாரக்கோவை பாடல் - 57)**

நோயின்றி ஆரோக்கியமாக வாழ விரும்புவர் பாழடைந்த வீடு, கோயில், சுடுகாடு, ஊரில்லாத இடத்தில் தனியே இருக்கும் முதுமரம், ஆகிய இடங்களுக்கு தான் மட்டும் தனியே போக மாட்டார் பகலில் உறங்க மாட்டார் என்று வலியுறுத்திக் கூறுகிறது.

**இசை மருத்துவம் :**

இசைக் கருவிகளை இசைப்பதால் ஏற்படும் ஒலியலைகள் மனித மூளையில் தூண்டுதலை ஏற்படுத்தி உடலில் உள்ள உயிர் வேதி நிகழ்வுகளை பல மாற்றங்களை ஏற்படுத்துகின்றன என்பது நவீன முறை மருத்துவம் ஆனால் பழந்தமிழர்கள் இதனை தமிழ் இலக்கியங்களில் முன்பே பதிவிட்டுள்ளனர்.

**“தீங்கனி இரவமொடு வேம்புமனைச் செரீஇ**
**வாங்கு மருப்பு யாழொடு பல்இயம் கறங்க”**
**…….. …………………….**
**காக்கம் வம்மோ காதலம் தோழி” (புறம் 281)**

என்ற பாடல் வரிகளில் போரில் புண்பட்ட தலைவனின் காயங்களை ஆற்றுவதற்கு யாழ், பல்லியம் போன்ற இசைக் கருவிகளை இசைத்துள்ளனர். இயற்கை மருத்துவமும் இசைமருத்துவமும் இரண்டறக் கலந்திருந்த முறையை விளக்குகின்றது.

**நாட்டு மருத்துவம் :**

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்ற கருத்துடன் இயற்கைப் பொருள்கள் மற்றும் மூலிகைகளைப் பயன்படுத்தி தலைமுறை தலைமுறையாகத் வாய்மொழியாகக் கடத்தப்படும் ஒரு பாரம்பரிய மருத்துவ முறையாகும். இது அறிவியல் அடிப்படையற்ற மக்களின் நம்பிக்கையும் அனுபவமும் சார்ந்த சிகிச்சை

முறைகளை உள்ளடக்கியது. மேலும் இது சித்த மருத்துவம், இயற்கை மருத்துவம், பாட்டிவைத்தியம், கைவைத்தியம் போன்ற பல பெயர்களில் அறியப்படுகிறது.

**இயற்கை மருத்துவம் :**

பழந்தமிழ்கள் இயற்கையில் இருந்து கிடைக்கும் எளிய மருத்துவக் குணமுடைய மருந்துப் பொருள்களைப் பயன்படுத்தி செய்யப்பட்ட மருத்துவம் இயற்கை மருத்துவமாகும்.

**"தீங்கனி இரவமொடு வேம்புமனைச் செரீஇ"** (புறம் 281)

என்ற பாடல் வரியில் வேம்பின் அனைத்து பொருட்களும் மருத்துவப் பொருள்களாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

**"வேம்பு சினை ஒடிப்பவும், காஞ்சி பாடவும்,**
**நெய்யுடைக் கையர் ஐயவி புகைப்பவும்"**(புறம் 296)

ஐயவிலிருந்து புகைகளை உண்டாக்கி நோய் எதிர்ப்புப் பொருளாகப் பயன்படுத்தியதை புறநானூறு வாயிலாக அறிய முடிகிறது.

**நான்மணிக்கடிகையில் மருத்துவம் :**

மருத்துவர் கேட்டும் போது நோயாளி தன் நோயினைப் பற்றி முழுமையாக சொல்ல வேண்டும் மருத்துவரிடம் எதையும் மறைக்காமல் எடுத்துக் கூற வேண்டும். அப்போதுதான் நோயின் தன்மையை அறிந்து விரைவில் அந்த நோயைக் குணப்படுத்தும் மருந்து சிகிச்சையை மேற்கொள்ள முடியும் என்பதை நான்மணிக்கடிகை கூறுகிறது.

**"தூர்ந்து ஒழியும், பொய் பிறந்த**
**போழ்தே மருத்துவன்,**
**'சொல்' என்ற போழ்தே,**
**பிணி, உரைக்கும்;- நல்லார்,**
**'விடுக!' என்ற போழ்தே விடுக!"** (நான்மணிக்கடிகை – 74)

**மனநல மருத்துவமுறைகள் :**

மனிதர்களின் நல்லவாழ்க்கைக்கு இன்றியமையாதது மனநலமாகும் மனநலமே உடல் நலத்தின் அடி நாதமாகும். அதனால் தான் வள்ளுவர் மனநலம் மன்னுயிர்க்கு ஆக்கம் என்று உரைத்தார். தொல்காப்பியம் உடலில் ஏற்படும் மாற்றங்களை "மெய்ப்பாடு" என்றுரைக்கிறது. பழந்தமிழர்களின் அகத்தேடலில் தலைவி அடையும் துயரங்களைத் தீர்க்கும் வாயில்களாக வருபவர்கள் அனைவருமே மனநலம் சார்ந்த ஆறுதல் மொழிகளையே அளித்துள்ளனர் என்பதை தமிழ் இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன.

**பழமையான மருத்துவ முறைகள் :**

தமிழில் மருத்துவம் என்பது பண்டைய தமிழர்களின் மருத்துவக் கலையோடு ஒன்றிணைந்துள்ளது. நாட்டுப்புற மருத்துவம் பாட்டி வைத்தியம், மூலிகை மருத்துவம் எனப் பல வடிவங்களில் இன்றும் தமிழ் மக்களின் வாழ்வியலோடு பின்னிப் பிணைந்துள்ளன.

**மருத்துவமுறைகளின் முக்கியத்துவம் :**

**உடல், மனம், ஆன்ம நலன்**

தமிழ் இலக்கிய மருத்துவமுறைகள் மனிதனின் உடல், மனம், மற்றும் ஆன்மா ஆகிய மூன்றையும் ஒருங்கே பேணிக் காப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளன. இயற்கையைப் பயன்படுத்தி நோய்களைத் தடுப்பதையும் உடல் நலத்தைப் பேணுவதையும் இந்த மருத்துவமுறைகள் வலியுறுத்துகின்றன.

**முடிவுரை :**

தமிழ் இலக்கியங்களான சங்க இலக்கியங்கள், சித்தர் பாடல்கள், திருமந்திரம் போன்ற பல நூல்களில் மருத்துவக் கலைகள் பற்றிய கூறுகள் காணப்படுகின்றன. பழந்தமிழர்கள் மருத்துவ முறைகளோடு நோய் வராமல் தடுக்கும் வழிமுறைகளைப் பின்பற்றியும் உணவே மருந்து என்ற மரபின்படி வாழ்ந்துள்ளனர் என்பதை தமிழ் இலக்கியங்கள் நமக்கு எடுத்துரைக்கின்றதை இக்கட்டுரையின் மூலம் அறிய முடிகிறது.

**பார்வை நூல்கள் :**

தமிழரின் மேலாண்மை சிந்தனைகள்

முனைவர் ப.இப்ராஹிம்

நியூ செஞ்சுரிபுக் ஹவுஸ்

அம்பத்தூர் சென்னை